

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 11-09-2025

# முதலீடுகளின் முதல்வர்!

**அனைத்திலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலீடுகளை ஈர்ப்பதிலும் முதல் அமைச்சராக உயர்ந்து நிற்கிறார். ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அவர் சென்று வந்த பயணமானது முதலீடுகளை ஈர்க்கும் வெற்றிப் பயணமாக அமைந்துவிட்டது.**

**“மன நிறைவோடு திரும்பியிருக்கிறேன். மாபெரும் வெற்றிப் பயணமாக அமைந்திருக்கிறது. கடந்த நான்கரை ஆண்டுகளில் மேற்கொண்ட என்னுடைய பயணங்களுக்கு எல்லாம் முத்தாய்ப்பாக இந்தப் பயணம் அமைந்திருக்கிறது. இந்தப் பயணத்தில் தான், மிக அதிக அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு இருக்கிறது”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

மொத்தம் 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இதன் மூலமாக, 17 ஆயிரத்து 613 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. மொத்தமாக 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மீது நம்பிக்கை வைத்து 10 புதிய நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கு முன்வந்து இருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கும் 17 நிறுவனங்களும், மற்ற மாநிலங்களை நோக்கி செல்லாமல், தமிழ்நாட்டிலேயே தங்களுடைய தொழிலை மேலும் விரிவுபடுத்த முடிவு செய்திருக்கிறார்கள். அதனால் தான் இது முழுமையான வெற்றிப் பயணமாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற இலக்கை முன்வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இதற்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். பல்வேறு தொழில் நிறுவனங்கள் இங்கு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற சூழலை முதலில் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள். அமைதியான மாநிலமாக தமிழ்நாடு உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. ஒரு துறையில் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சி அடைந்து வருகிறது. அரசின் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இருக்கிறது. இவை அனைத்தும் தமிழ்நாட்டை கவனம் பெறும் மாநிலமாக உயர்த்தி இருக்கின்றன. இந்த அடிப்படையில் இந்தியாவின் கவனத்தை, உலகின் கவனத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.

**ஒரு தொழில் தொடங்குவதாக இருந்தால் அந்தத் தொழில் மூலமாக ஏற்றுமதி - இறக்குமதி எவ்வளவு என்று முதலமைச்சர் கணக்கிடுவது இல்லை. அந்தத் தொழில் நகரத்தில் உருவாகிறதா? கிராமத்தில் உருவாகிறதா? எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும்? அந்த வட்டாரத்தைச் சேர்ந்த எத்தனை பேருக்கு இதனால் பயன்? பெண்களுக்கு எத்தனை விழுக்காடு வேலை கிடைக்கும்? அந்தத் தொழில் நிறுவனத்தால் அந்த வட்டாரம், மாவட்டம் எத்தகைய வளர்ச்சியைப் பெறும்? அந்த வட்டாரத்தில் இருக்கும் சமூக மக்களின் வளர்ச்சி எவ்வளவு கூடும்? என்பதை நோக்கமாக வைத்து ஒரு தொழிற்சாலையை, நிறுவனத்தை, முதலமைச்சர் அவர்கள் தொடங்குகிறார். இதனைத்தான் திராவிட மாடல் என்று சொல்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி மற்றும் ஆடைகள், மின்னணுவியல் ஆகிய பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்குகிறது. எனவே மூலதனம் அதிகம் உள்ள தொழில்களையும், வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் தொழில்களை ஈர்ப்பதில் முதலமைச்சர் கவனமாக இருக்கிறார். 130க்கும் மேற்பட்ட ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தமது திட்டங்களை நிறுவியுள்ளது.

தொழில்கள் ஒரே இடத்தில் குவியாமல், பரவலாக ஆக்கி இருக்கிறார் முதலமைச்சர். கடந்த நான்கு ஆண்டுகளில் தூத்துக்குடியில் நியோ டைடல் பார்க், மதுரையில் டைடல் பார்க், நெல்லையில் எரிசக்தித் திட்டங்கள், விருதுநகரில் ஜவுளி பூங்கா, தூத்துக்குடியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளன. தூத்துக்குடியைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக அரசு வளர்த்தெடுத்து வருகிறது. தூத்துக்குடியில் விண்வெளி பூங்கா, கப்பல் கட்டுமான நிறுவனம், ஏற்றுமதி மையம், நெல்லையில் உணவு பதப்படுத்துதல் மண்டலப் பிரிவு ஆகிய அறிவிப்புகளை கடந்த மாதம் செய்துள்ளார் முதலமைச்சர். இப்படி பரவலான வளர்ச்சியை உருவாக்கி உள்ளார் முதலமைச்சர்.

தமிழ்நாட்டை நோக்கி, பல்வேறு உலக நிறுவனங்கள் படையெடுக்கக் காரணம், இங்கு அவர்களது நிறுவனங்களுக்குத் தேவையான தகுதியான மனித சக்திகள் கிடைக்கின்றன. பள்ளி மாணவர்களின் திறன்களை அரசு மேம்படுத்தி வருகிறது. கல்லூரி மாணவர்களின் திறமையும், இளைஞர்களின் திறமையும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளிக் கல்வியில் ரோபோடிக்ஸ், தரவு அறிவு மற்றும் நிதித் திட்டமிடுதல் ஆகியவற்றை இணைக்கப் போவதாக அரசு சொல்லி இருக்கிறது. எதிர்கால வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை குழந்தைகள் பெறுவதுடன் இன்றைய சவால்களையும் எதிர்கொள்ள இயலும் வகையில் பள்ளிப் படிப்புகள் உருவாக்கப்படுகின்றன.

வளர்ந்து வரும் புதிய பாடங்கள், தொழில்நுட்பங்கள், அறிவியல் ஆராய்ச்சிகள் ஆகியவற்றுக்கு ஏற்ப உயர் கல்வியில் பாடத்திட்டம் மாற்றப்பட்டுள்ளது. கற்பித்தல் முறைகள் மாற்றப்பட்டுள்ளன. ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு, பசுமை ஆற்றல், தொழில் 4.0 ஆகியவற்றுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு தனது பாடத்திட்டத்தை மாற்றி அமைத்துள்ளது. எனவே பல்வேறு திறமைகளுடன் மாணவர்கள் வெளியில் வருகிறார்கள். முதலமைச்சரின் கனவுத்திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தில் இதுவரை 44 லட்சம் மாணவர்கள் மேம்பட்ட பயிற்சிகளைப் பெற்றுள்ளார்கள். இது போன்ற தகவல்கள்தான் உலக நிறுவனங்களை ஈர்க்கிறது.

**கடந்த 4 ஆண்டுகளில், 32.82 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையில், ரூபாய் 10.63 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்து இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இது, இதுவரை யாரும் செய்யாத சாதனை ஆகும். இது, இதுவரை எந்த மாநிலமும் செய்யாத சாதனை ஆகும். எந்த முதலமைச்சரும் எட்டாத சாதனை ஆகும்.**

**ஒரு தொழிற்சாலை வருவதன் மூலம் அதனைச் சுற்றியுள்ள வட்டாரம், மாவட்டம், சமூகம் வளர்கிறது. மாநிலம் செழிக்கிறது. செழிப்பை உருவாக்கி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**





காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில், அவரது திருவுருவச் சிலைக்கு நேற்று முன்தினம் (9.9.2025) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அங்கு வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் குறிப்பேட்டில் குறிப்பு எழுதி கையொப்பமிட்டார். இந்நிகழ்வில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - ‘சிம்பொனி’ சிகரம் தொட்ட தமிழன்

# இசைஞானி இளையராஜாவுக்கு பொன்விழா ஆண்டு மாபெரும் பாராட்டு விழா!

## செப். 13 அன்று - நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது !

**சென்னை, செப்.11-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு பொன் விழா ஆண்டு 50 மாபெரும் பாராட்டு விழா நேரு உள்விளையாட்டு அரங்கில் 13.9.2025 அன்று மாலையில் நடைபெறுகிறது.**

அதன் விவரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், அன்புமிளிர இசைஞானி என அழைத்துப் போற்றப்பட்ட இசைஞானி இளையராஜா அவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி போன்ற பல்வேறு மொழிகளில் 1,500க்கும் மேற்பட்ட திரைப்படங்களில், 8,500க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

1975-ஆம் ஆண்டு துவங்கிய இசைஞானி இளையராஜா அவர்களின் இசைப் பயணம் இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. திரையிசை மட்டுமின்றி பல்வேறு தனியிசை படைப்புகளையும் வெளியிட்டுள்ளார் இசைஞானி இளையராஜா அவர்கள்.


முழு மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனி இசை சிகரத்தையும் தொட்டு சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை படைத்த முதல் தமிழர் மட்டுமல்ல இசைஞானி இளையராஜா முதல் இந்தியரும் ஆவார். ஆசிய நாடுகளைச் சேர்ந்த எவரும் இச்சாதனையை இதுவரை நிகழ்த்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**முதலமைச்சர் பாராட்டும், வாழ்த்தும்!**

8.3.2025 அன்று இலண்டன் மாநகரில் முதல் நேரடி சிம்பொனி இசை நிகழ்ச்சி நடத்தவிருந்த நிலையில், 2.3.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களைப் பாராட்டி, அவருக்கு நினைவுப்பரிசு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள். அது குறித்து சமூக வலைதளப் பதிவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது,

“தம் கைப்பட எழுதிய Valiant Symphony இசைக்குறிப்புகளை உற்சாகத்துடன் காட்டி மகிழ்ந்தார். உலகத் தமிழர்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த இசை மூச்சான இளையராஜா அவர்களின் கணக்கற்ற சாதனைகளில் இந்தச் சாதனை ஒரு மணி மகுடமெனத் திகழ வாழ்த்துகிறேன்! “ என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, இலண்டன் மாநகர் சென்று சிம்பொனி சாதனை நிகழ்த்தி வெற்றியுடன் சென்னை திரும்பிய நிலையில் 13.3.2025 அன்று இளையராஜா அவர்கள் முதலமைச்சர் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்து, நன்றி தெரிவித்தார்கள்.



**முதலமைச்சர் அறிவித்த பாராட்டு விழா!**

இதன் பின்னர், முதலமைச்சர் அவர்கள், தம்முடைய வலைதளப்பதிவில்,

**“இலண்டன் மாநகரில் சிம்பொனி சாதனை படைத்து திரும்பியுள்ள இசைஞானி இளையராஜா அவர்கள் அவரது பயணத்துக்கு வாழ்த்திய என்னை நேரில் சந்தித்து நன்றி கூறினார். அவரது அரை நூற்றாண்டு காலத்திரையிசைப் பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளோம்.!”** என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

இதன்படி, வரும் 13.9.2025 சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் திரையுலகில் பொன் விழா காணும் சிகரம் தொட்ட தமிழன் திரு.இசைஞானி இளையராஜா அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மிகப்பெரிய அளவில் பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இன்னிசை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து இசைஞானி இளையராஜா அவர்களின் சிம்பொனி இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை வழங்குகிறார்கள். தொடர்ந்து நடைபெறும் பாராட்டு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்கள். உலக நாயகன் கமல்ஹாசன், எம்.பி., அவர்களும், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். நிறைவாக இசைஞானி இளையராஜா எம்.பி., அவர்கள் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

இவ்விழாவில். அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், திரைக் கலைஞர்கள், திரைத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தமிழ்த் திரையுலக முக்கிய பிரமுகர்கள் முதலானோரும் பங்கேற்கிறார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நன்றி கூறுகிறார்.